பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஏடு: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 29 திங்கட்கிழமை (13-07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 228

## செட்டிகுளம் முகாம் தகர்ப்பை அடுத்து

# தந்திரிமலைப் பகுதியிலிருந்து படையினர் பின்வாங்கினர்!

## பாப்பரசர் ஆஸ்பத்திரியில்

வத்திக்கான், ஜூலை 13

புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் [வயது 72] நேற்று கடும் சுகவீனம் காரணமாக ரோம் கத்தோலிக்க பல்கலைக்கழக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கடும் வயிற்று நோவு காரணமாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படலாம் என அவரின் மருத்துவ உதவியாளர் தகவல் வெளியிட்டார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப் பொருள்களை

## கூடிய விலையில் விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும்

### காவல்துறை பொறுப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

அத்தியாவசியப் பொருள்களை கூடிய விலையில் விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பதுக்கல் சமூக விரோதச் செயலாகக் கருதப்படும் என்றும் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

தற்போதைய யுத்தகால சூழ்நிலையைச் சாட்டாக வைத்து மக்களின் அத்தியாவசியப் பொருள்களான மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், சவர்க்காரம் போன்றவற்றைப் பதுக்கியும், கூடிய விலையில் விற்றும் வந்த வர்த்தகர்கள் மீது காவல்துறை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மண்எண்ணெய் விலை கிளிநொச்சியில் வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், ஜூலை 13

கிளிநொச்சிப் பகுதியில் மண் எண்ணெய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண் எண்ணெய் ஏற்றி வந்த பல லொறிகள் கிளிநொச்சிப் பகுதியில் தரித்து நிற்பதாகவும், யாழ். வரமுடியாத நிலையில் மண் எண்ணெய் அங்கு தேங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உணவு மற்றும் பொருள்களுடன் வந்த ஏராளமான லொறிகளும் கிளிநொச்சிப் பகுதியில் தரித்து நிற்கின்றன என்றும்—

அவற்றின் சாரதிகள் பலர் லொறிகளை அங்கே நிறுத்திவிட்டு யாழ். வந்து சேர்ந்துள்ளனர். என்றும் அறியவந்தது.

(ஓ-5)

## இந்தியாவில் இன்று ஜனாதிபதித் தேர்தல்

புதுடில்லி ஜூலை 13

இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் இன்று திங்கள் நடைபெறுகிறது.

புதுடில்லி நாடாளுமன்ற அலுவலகத்திலும்—

ஒவ்வொரு மாநிலங்களிலும் உள்ள சட்டசபை அலுவலகங்களிலும் இன்று காலை 10மணியளவில் வாக்களிப்பு ஆரம்பமாகும்.

வாக்குகள் எண்ணப்படுவது எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறும்.

இந்திரா காங்கிரஸ் சார்பில் தற்போதைய உபஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா, எதிர்க்கட்சிகளின் சார்பில் பேராசிரியர் ஜி ஜி. ஸ்வெல் மற்றும் கே. கே.

[5 ஆம் பக்கம் பார்க்க]

### பல்கலைக்கழக அனுமதி முறை:

## வழக்குத் தாக்கல் செய்ய பிரதிநிதிகள் கொழும்புக்கு!

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக அரசு அறிவித்திருக்கும் தவறான நடைமுறையை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்வதற்காக பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று கொழும்புக்குப் புறப்பட்டது.

அரசு அறிவித்திருக்கும் புதிய நடைமுறையால் பாதிக்கப்பட்டிருக்கும் மாணவர்களின் சார்பில் வழக்குத் தாக்கல் செய்வதற்காக அம்மாணவர்களின் பெற்றோர் சிலர் நேற்று கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

அவர்கள் அங்கு சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசனை நடத்திய பின்னர், அரசு அறிவித்துள்ள புதிய நடைமுறையை எதிர்த்து அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ)

## பல காவலரண்களை கைவிட்டதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

செட்டிகுளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டதை அடுத்து செட்டிகுளம் பகுதி எல்லையோரங்களிலும், தந்திரிமலை பகுதியிலும் அமைந்திருந்த காவலரண்கள் பலவற்றைப் படையினர் கைவிட்டனர். அவர்கள் பின்வாங்கி பிரதான முகாம் பகுதிக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் செட்டிகுளம் முகாம் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் - தள்ளாடி, வன்னாலை, மாந்தை ஆகிய முகாம்களில் இருந்து கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் — வவுனியா நெளுக்குளம் பகுதியில் அமைந்த தமிழர்களின் குடியிருப்புகள் மீது ஷெல்கள் விழுந்து வெடித்தன என்றும் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் பகல் முழுவதும் வவுனியா வடக்கு

[5 ஆம் பக்கம் பார்க்க]

## சிங்களக் குடியேற்றத்திற்கு உதவிய முகாமே அழிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 13

செட்டிகுளம் பகுதி, இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட பின்னர் சிங்கள மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட தந்திரிமலைப் பகுதியில் தீவிர சிங்கள குடியேற்றங்கள் செய்யப்பட்டன.

அப்பகுதியில் சிங்கள, முஸ்லிம் மக்கள் குடியேற்றப்படுவதற்குக் காரணமாக இருந்த இராணுவ முகாம்களில் ஒன்றே நேற்று முன்தினம் புலிகளால் தகர்த்து அழிக்கப்பட்டது.

—இவ்வாறு "புலிகளின் குரல்" வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது

1990ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும், 91ஆம் ஆண்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ஸ்ரீலங்காப் படையின் உத்தி குறித்து கேள்வி!

லண்டன், ஜூலை 13

செட்டிகுளம் பகுதி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டிருப்பதை அடுத்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் உத்தி குறித்து கேள்விக்குறி எழுப்பப்பட்டிருப்பதாக நேற்றிரவு பி. பி. ஸி. அறிவித்தது.

விடுதலைப் புலிகளின் செயற்பாட்டை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் யாழ். குடாநாட்டில் ஆயிரக்கணக்கான துருப்புக்களைக் குவிக்கும் உத்தியே சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது

குடாநாட்டில் பல்லாயிரக்கணக்கில் படையினரைக் குவித்திருப்பதால் வடக்கில்

[ 5 ஆம் பக்கம் பார்க்க]

## முப்படைத் தளபதிகள் மீது தாக்குதல் நடத்த திட்டமாம்

கொழும்பு, ஜூலை 13

முப்படைகளின் தளபதிகள் மீது தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

இதற்கான விசேட அதிரடிக் குழு ஒன்றினை விடுதலைப் புலிகள் அமைத்திருப்பதாகவும் [illegible] கிடைத்திருப்பதாக [illegible] சார்பு [illegible] செய்தி தெரிவிக்கிறது.

இராணுவத் தளபதி ஜெனரல் வைத்தியரத்ன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பெர்னாண்டோ மற்றும் விமானப் படைத் தளபதி டெறன்ஸ் குணவர்த்தனா ஆகியோரையே இலக்கு வைத்து தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று [illegible] தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-எ)

## சந்திவெளிப் பகுதியில் இரு தமிழரின் சடலங்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 13

முஸ்லிம்களினால் கோரமாகக் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் இரு தமிழர்களின் சடலங்கள் கடந்த வியாழனன்று வாழைச்சேனை, சந்திவெளிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே பகுதியில் அண்மையிலும் கூட தமிழர்கள் மூவரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் வாழைச்சேனை பேய்த்தாளை அகதி முகாமிலிருந்து எட்டுத் தமிழர்கள் முஸ்லிம்களால் கடத்திச் செல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை முதல் படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கைக்கு உள்ளாகியிருக்கும் மட்டக்களப்பு பழுகாமம் பகுதியில் தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## தம்புள்ளவில் 1 லட்சம் பேர் நேற்று சத்தியாக்கிரகம்!

தம்புள்ளவில் நேற்று 3 ஆயிரம் பௌத்த பிக்குகள் உட்பட ஒரு லட்சம் பேர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர் என்று பி. பி. ஸி தெரிவித்தது.

சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து அங்கு நடந்த கூட்டத்தில் பிக்குமார் மற்றும் கத்தோலிக்க, முஸ்லிம் மத குருமார்களும் உரையாற்றினர்.

தம்புள்ளவில் கந்தளம என்ற இடத்தில் உல்லாச ஹோட்டல் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தச் சத்தியாக்கிரகம் ஒழுங்கு செய்யப்பட்டது.

சத்தியாக்கிரகம் முடிந்த பின் அங்கு கூடியிருந்தவர்கள் கந்தளம ஹோட்டல் நிர்மாணிக்கப்படும் இடத்துக்குச் செல்ல முற்பட்ட போது பொலிஸார் அவர்களைத் தடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-10)

## ஐ. தே. க. பத்திரிகை மீது ஜே. ஆர் வழக்குத் தாக்கல்?

கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகபூர்வ வெளியீடான "சியரட்ட" பத்திரிகைக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா வழக்குத் தொடர இருப்பதாக 'சிறிலங்கா' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

"இந்த வீரர்கள் அன்று எங்கு போனார்கள்" என்ற தலைப்பில் "திவயின" பத்திரிகையில் வெளியான கட்டுரையை "சியரட்ட" மறுபிரசுரம் செய்ததற்காகவே வழக்குத் தொடரப்பட இருப்ப

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மர்மப் பொருளை எடுத்து விளையாடிய இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஒரு பொருளை அது என்னவென்று இனம் காணாமல், பயன்படுத்துவதோ அல்லது பரீட்சித்துப் பார்ப்பதோ மிகவும் ஆபத்தானது!

இதனைப் புரிந்து கொள்ளாமல் புதிய பொருளைப் பரீட்சித்துப் பார்த்த இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

வீதியில் கண்டெடுத்த "பற்றறி" போன்ற சிறிய பொருள் ஒன்றை அது என்னவென்று தெரியாத நிலையில் இவர்கள் இருவரும் அதனைச் சைக்கிள் "டைனமோ"வில் பொருத்திச் சுற்றினர். அவ்வாறு செய்து வானொலிப் பெட்டியை இயக்க வைப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது

சைக்கிள் இல்லைச் சுற்றி வரும் அந்த 'மர்மப்' பொருள் வெடித்தது. அதனால் அவர்கள் இருவரும் காயமுற்றனர்.

கொழும்புத்துறை மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் நாகராசா (16 வயது), சிவசோதி சிவதர்சன் (8 வயது) ஆகிய அவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. (அ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கம்பியூட்டர் கல்வி ★




★ BASIC
★ PASCAL
★ d BASE III +
★ LOTUS 1-2-3
★ WORD STAR 5.5

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 16-07-1992

மேலதிக விவரங்களுக்கு:
யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,
37 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

'சதா பொன்ஸ்',
அல்வாய் கிழக்கு,
அல்வாய்

சயன்ஸ் சென்ரர்,
மடத்தடி,
சாவகச்சேரி.

[சி-2918]


கொக்குவில் மேற்கு, சொர்ணவடலி
ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் ஆலய

## வருடாந்த அலங்கார உற்சவத்தை

முன்னிட்டு
கம்பன் கழக அமைப்பாளர்
**இ. ஜெயராஜ்** அவர்களால்
தினமும் மாலை 7-00 மணி முதல்
நடத்தப்படும்

### கம்ப இராமாயணத் தொடர் விரிவுரை

(பாலகாண்டம், அயோத்தியா காண்டம்)

16 – 07 – 1992 – ★ அன்னவர்க்கே சரண்
17 – 07 – 1992 – ★ நெறியிற் புறம் செலா - கோசலம்
18 – 07 – 1992 – ★ கரிய செம்மலை திரு - உறப்பயந்தனன்
19 – 07 – 1992 – ★ ஒருவனைக் கந்தி நிதி
20 – 07 – 1992 – ★ மைவண்ணம், கால்வண்ணம்
21 – 07 – 1992 – ★ அண்ணலும் நோக்கினான் - அவளும் நோக்கினாள்
22 – 07 – 1992 – ★ கொடுமனக் கூனி - தோன்றினாள்
23 – 07 – 1992 – ★ தூய சிந்தை திரிந்தது
24 – 07 – 1992 – ★ போகிறேன் விடையும் - கொண்டேன்
25 – 07 – 1992 – ★ குகனொடும் ஐவர்
26 – 07 – 1992 – ★ பாதுகா பட்டாபிஷேகம்

– தர்மகர்த்தா சபை.

[21732]

## 16ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
10
03
1893

மறைவு:
28
06
1992

காரைநகர் ஈழத்து சிதம்பர தேவஸ்தான
நாதஸ்வர வித்துவான்

### ந. கைலாசக்கம்பர்

அந்தியேட்டி: 13–07–1992

எங்கள் குடும்பத்தின் தலைவராக இருந்து நல்வழி காட்டிய உங்கள் நினைவுகள் என்றும் எம்மனதை விட்டகலா. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவன்கோவில் தெற்கு வீதி,
சித்தன்கேணி

[சி-2568]

உ

சரவணை - பள்ளம்புலம்
அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோயில்

## மஹோற்சவ - தீர்த்த உற்சவத் திருநாள்

மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை காரணமாக நித்திய, நைமித்திய பூசைகள் தடைப்பட்டுள்ள மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, தீர்த்த உற்சவத் திருநாளாகிய 14-07-1992 (நாளை) செவ்வாய்க்கிழமை மு.ப. 10-30 மணிக்கு, நல்லைக் கந்தன் ஆலயத்தில் முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும், வழிபாடும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

அத் தருணம் அடியார்கள் யாவரும் வருகை தந்து முருகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மேற்படி ஆலய
அறங்காவற் சபையினரும்,
உபயகாரர்களும்.

(21737) (சரவணை)

கொக்குவில் இந்துக் கல்லூரி

## வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி-1992

காலம்: **15 - 07 - 1992** புதன்கிழமை
நேரம்: பிற்பகல் 2-00 மணி
பிரதம விருந்தினர்: வைத்தியகலாநிதி பொ. சொர்ணலிங்கம் L.R.C.P (Lond), M.R.C.S. (Eng.), M.R.C.P.
திருமதி ஜெயராணி சொர்ணலிங்கம்.

பழைய மாணவர்கள், பெற்றோர்கள்,
நலன் விரும்பிகள் அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி.

இங்ஙனம்:
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

[சி 2573]

## ஓராண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை கஜன்

(சின்னையா சிவரத்தினம்)

அன்னையின் மடியில்:
**15-01-1973**

தமிழ்த் தாயின் மடியில்:
**13-07-1991**

விடுதலைத்தொட்டிலில் விளையாடிய குழந்தை
வீரத்துணிவுடன் வீழ்ந்துவிட்டாய் செம்மண்ணில்
விலை கொடுத்து வாங்கிடுவோம் உன்னுயிரை
விதியே நீ சொல் விலை என்னவென்று?
உயிர் கொடுத்த உத்தமனே!
உன்னைப் பிரிந்து தவிக்கின்றோம்
வீரகாவியம் படைத்த வீர கஜனே!
நீ மறைந்து விட்டாலும்
உனது நினைவலைகள் என்றென்றும்
எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்
தமிழீழம் பிறக்கும் – உன்
வரலாறு நிலைக்கும்.

– குடும்பத்தினர்

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(21745)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி அறிவித்தல்

## செல்வன் ரமணானந்த சர்மா

கடந்த 30-06-92 எமது அருந்தவச் செல்வன் ரமணானந்த சர்மா (2ஆவது லெப். மணிமாறன்) எம்மை விட்டுப் பிரிந்த துயரச் செய்தி கேட்டு உடன் எமக்கு ஆதரவாக இருந்தும், மேலும் பல வகைகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பாக எமது மைந்தனின் பாடசாலை நண்பர்கள் இவ்வேளையில் எமக்கு ஆற்றிய உதவிகள் எம்மால் ஈடுசெய்ய முடியாதவை. மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் எமக்கு பல வகைகளிலும் உதவிகள் செய்துள்ளார்கள். இவற்றை நாம் மறக்க முடியாது. அத்துடன் கண்ணீர் அஞ்சலி செலுத்திய யாழ். இந்துக் கல்லூரியின் பல்வேறு மன்றங்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் தொண்டர் நிறுவனங்கள், பொது மக்கள், எமது அயலவர்கள் ஆகிய யாவர்க்கும் எமது நன்றி என்றென்றும் உரித்தாகுக.

வைத்திய நாத சர்மா –
சொர்ணாம்பாள்

ஆசாரியார் ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[21739]

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை, தலைமையகம்.

# பதவி வெற்றிடம்

1. ஆங்கில ஆசிரியர்
2. ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளர் ஆசிரியர்
3. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர் ஆசிரியர்

மேற்படி பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தகைமைகள், அனுபவம், ஆற்றல், ஆர்வம், சேவை செய்யும் மனப்பான்மை உள்ளோர் விரும்பப்படுவர்.

தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளருக்கு செய்முறைப் பரீட்சை 24 - 07 - 1992 பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும். ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளருக்கான செய்முறைப் பரீட்சை 25 - 07 - 1992 பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும். தமது தட்டச்சு இயந்திரங்களை கொண்டு வரவும்.

விண்ணப்பப் படிவங்கள் யாவும் 23-07-1992க்கு முன் கிடைக்க கூடியதாக எமக்கு அனுப்பி வைக்கவும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

### தமிழ், ஆங்கில, தட்டச்சு சுருக்கெழுத்து பயிலும் மாணவர்கள்

மேற்படி கல்வி பயில விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை 24-07-1992க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். இதற்கான நேர்முகப் பரீட்சை 30-07-1992இல் நடைபெறும். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.


– கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
11-07-1992.

[சி-2572]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்:
07
07
1912



விண்ணில்:
13
06
1992

### அமரர் பொன்னம்பலம் நடராஜா

(மலாயன் பென்சனர்)

பார் போற்ற, பந்துக்கள் போற்ற வாழ்ந்த உன் பேற்றை எண்ணி இழப்பின் ஆற்றாமையை ஆற்றுகின்றோம் நாம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்,
சகோதரிகள்.

இணையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

(21727)

# ஒற்றையாட்சி அரசமைப்பில் அதிகாரப் பகிர்வு சாத்தியமில்லை

## லிபரல் கட்சியினர் எடுத்துரைப்பு

கொழும்பு, ஜூலை 13 தற்போதைய ஒற்றை ஆட்சி அரசியலமைப்பின் கீழ் அர்த்த புஷ்டியுள்ள அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள முடியாது. 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் தோல்வி அதனைத் தெளிவுபடுத்தியுள்ளது.

இதனால் சமஷ்டி அரசியலமைப்பின் கீழ் தான் அரசியல் அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்துவது அவசியமாகிறது.

இவ்வாறு கருத்துத் தெரிவிக்கிறார்கள் லிபரல் கட்சித் தலைவர்கள். தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமாக அவர்கள் பின்வரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

அதிகாரப் பகிர்வு உண்மையாக வேண்டும் என்றால், அரசின் அதிகாரங்கள் பிரிக்கப்பட வேண்டும். அதற்காக அடிப்படை உரிமைகள் பலப்படுத்தப்படுவதையும் இரண்டாவது சபை ஒன்றை அமைப்பதையும் வலியுறுத்த வேண்டும்.

### வடக்கு - கிழக்கில்

ஒன்பது மாகாணங்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதை நாம் விரும்புகின்றோம்.

எனினும் — வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மையினராக வாழும் சிங்களவர் மற்றும் முஸ்லிம்களுக்கு சுயாட்சிப் பிரிவொன்றை வழங்கக் கூடிய அரசியல் சட்ட ஏற்பாடுகளுடன் இந்த இரண்டு மாகாணங்களும் இணைக்கப்படுவதையே நாம் ஆதரிக்கின்றோம்.


இந்த நிபந்தனைகளின் அடிப்படையில், இணைந்த வடக்கு — கிழக்கு மாகாணத்தை அரசாங்கமும் பிரதான எதிர்க்கட்சியும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### கவலையானது

வடக்கு — கிழக்கு மாகாணங்களை இணைக்க முடியாது என்ற அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எதிராகச் செயற்படும் இனவாதிகளின் பிரசாரங்களையிட்டு எமது கட்சி கவலை கொள்கிறது— என்று தெரிவித்தனர்.

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தம்மைச் சந்தித்த போதே அவர்கள் இக் கருத்துக்களை முன் வைத்தனர். [அ-எ]

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



ஜனனம்: 28 — 04 — 1973

வீர மரணம்: 30 — 05 — 1992

### வீரவேங்கை இன்பம்
(கணேசராசா துஷ்யந்தன்)

மன்றத் தலைமை மறந்துவிட்டு
மண்ணைக் காக்க மனம் உவந்து
சென்று நின்றாய் செருக்களத்தில்
'இன்பன்' ஆகி உயிர் நீத்தாய்
அன்றுன் பணியால் எம் மன்றம்
இன்றும் அலகில் புகழ் பேணும்
என்றும் மறவோம் நாம் உன்னை
எங்கள் இனிய துஷ்யந்தனே.

இந்துமா மன்றம்,
கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி,
கோப்பாய்.

[21721]

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணகம்: 19—09—1967

விண்ணகம்: 25—06—1991

### செல்வி தர்சனா குமாரசாமி
(ஆசிரியை, அ.த.க. பாடசாலை, தர்மக்கேணி)

திதி: 13—07—1992

''அம்மா சென்று வாறேன்'' என்று கூறி
கல்வி புகட்டச் சென்ற நீ
திரும்பி வரும் வேளையில் காலனை விடக்
கொடிய கயவன் காத்திருந்து கத்தியால்
உன்னுடலைக் குத்தியபோது 'அம்மா' என்றாயோ?
இல்லை, 'ஆண்டவா' என்றாயோ?

ஆண்டொன்று சென்றதம்மா
அடங்கவில்லை எம் கண்ணீர்

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் திதி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

- குடும்பத்தினர்.

பெரியபளை,
பளை.

(21729)

## அராலியில் சிறுதானியம்

அராலி, ஜூலை 13

அராலிப் பகுதி விவசாயிகள் சிறுதானிய செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஏற்கனவே பம்பாய் வெங்காயச் செய்கையில், ஈடுபட்டு வந்த விவசாயிகளில் 50பேர் வரை குரக்கன் செய்கையிலும், 35 பேர் வரை பயறு செய்கையிலும் ஈடுபட்டுள்ளனர். [இ-12]

## அஞ்சல் அறிமுக அட்டைகள் தேக்கம்

அளவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் அஞ்சல் அறிமுக அட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன.

நாட்டு நிலைமை காரணமாக பல மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ளதால், அவர்களின் அறிமுக அட்டைகளே இவ்வாறு தேங்கியுள்ளன என தெரியவருகிறது. [இ-ரி]

## 4,110 கிராம் ஹெரோயின் பிடிபட்டது

கொழும்பு, ஜூலை 13

கடந்த ஒரு வார காலத்தில் 4 ஆயிரத்து 110 கிராம் ஹெரோயினை பொலிஸ் போதைவஸ்து ஒழிப்புப் பிரிவினர் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவங்கள் தொடர்பாக 8 தமிழர்கள் மற்றும் இரண்டு பெண்கள் [illegible]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 21 — 02 — 1960

மறைவு: 25 — 06 — 1991

அமரர்

### விஸ்வலிங்கம் கைலைநாதன்
(யாழ். வளாக பௌதீக பீட பட்டதாரி, ஆசிரியர் கிளிவெட்டி மகாவித்தியாலயம், திருகோணமலை)

திதி: 13 — 07 — 1992

அன்புக்கும், பாசத்திற்கும் உரிய அன்புச் சகோதரா! ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் பிரிவால் ஆறாத்துயரில் வாடுகின்றோம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
- குடும்பத்தினர்.

''சிவ பவனம்''
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

[5147]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### சிவபாதசுந்தரம் கலாதீபன்

படைப்பு: 16 - 12 - 1966

அழிப்பு: 28 - 06 - 1988

திதி: 13 — 07 — 1992

அணைந்ததோர் அன்புத் தீபம்!
என்றும் அணையாதது எங்கள் பாசதீபம்!
மறைந்தது எங்கள் மணிவிளக்கு - என்றும்
மங்காத எங்கள் குல விளக்கு.

உங்கள் பிரிவால் வாடும்:
அம்மா, அக்கா, அண்ணாமார்,
அண்ணிமார், உறவினர், நண்பர்கள்.

''கலா தீபம்''
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

[4911]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் "அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்", இல.15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-2909)

## தேவை

இயந்திர இயக்குனர் வேலை தெரிந்தவர்களும், அச்சுக் கோர்க்கத் தெரிந்தவர்களும் நேரில் வரவும். வேதனம்: ரூ. 2,000 முதல் ரூ. 2,500 வரை. ஏ.எஸ்.ஜே. பிரின்ரிங் வேக்ஸ், மல்லாகம். (4910)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம் அனைத்துக்கும் நாடுங்கள். தினமும் காலை 8மணி முதல் 12 மணி வரை. த.சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை — 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [நேரம் பிற்பகல் 2 முதல் 6வரை] [21687]

## பயிற்சிப் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [5152]

## தவறிவிட்டது

யாழ். உயர் கலைக் கல்லூரிக்கும் - ஆரியகுளம் சந்திக்கும் இடையில் தவச்செல்வி தர்மலிங்கத்தின் 688611490V இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் டச் றோட், உடுவில், சுன்னாகம் என்னும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். [21744]

## புலமைப் பரிசில்

வினா - விடை 1992 உட்பட விற்பனையாகிறது. மேலும் இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு, G C E. [O/L]வினா - விடை, G.C.E. [A/L] வினா - விடை விற்பனையாகிறது. அறிவகம் புத்தகசாலை. [சி-2919]

## O/L - 92 வினாத்தாள்

O/L Dec. 92 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். பரீட்சைப் பகுதி: Bond Institutes, யாழ்ப்பாணம். [5153]

## கல்வி

O/L இல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் திறமைச் சித்திக்கு கற்பிக்கப்படும். சிறு குழுக்களாகவோ, தனிப்பட்ட வகுப்பாகவோ, வீடுகளுக்கோ வந்தும்கற்பிக்கப்படும். ஆண்டு 6,7,8,9,10,11வரை. தொடர்பு கொள்க: N K. குகமாறன், பண்டிதர் வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். [4913]

# கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை

**மானிப்பாய்.**

இந்த வைத்தியசாலைக்கு 15 - 04 - 1992இல் தாதிமார் பயிற்சி சம்பந்தமாக நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் தந்த மாணவிகளை உடனடியாக தொடர்பு கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

— அதிபர்.

(சி-2917)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 06 — 10 — 1921 | 07 — 07 — 1990 |

அமரர்

## பிரம்மஸ்ரீ பொ. கனகசபாபதி ஐயர்

அன்பும், பண்பும் நிறைந்த எங்கள் குடும்பத் தலைவர் எம்மை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகளாகிய போதும், இன்றும் அவர் எங்களுடன் உறவாடி வாழ்ந்துவருவது போன்ற பிரமை மாறாமல் இருக்கிறோம். எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள் அன்புத் தெய்வத்தின் அளவற்ற அன்பையும், உயர்ந்த பண்பையும் எப்படி மறக்க முடியும்?

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்மார்.

28, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். [21719]

# ஒரு திங்கள் ஓடி மறைந்ததோ?



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 16 — 03 — 1929 | 14 — 06 — 1992 |

## அமரர் சிற்றம்பலம் குலசிங்கம்

(Rtd: Auditor, Cottage & Industries Dept.)

கொக்குவிலில் பெயர்விளங்கும்
குலசிங்கப் பெரியோனே!
தக்கவர்கள் பாராட்டும் தகைமையெல்லாம்
பெற்றவனே
மிக்க புகழ்ப் புதுக்கோவில் சிற்றம்பலத்தார் சீர்
மகனே, மறப்போமா
எக்குறைதான் பெற்றீரோ? இத்தரையில்
நீரகல......
சிக்கல் எமக்கையா, சிந்தை தளர்ந்தோமே!

எம் குல விளக்காய் தலைமையேற்று, எம்பேறுகளைக் கண்டாய். மக்களின் வாழ்வுமிளிர்ந்துவரும் இக்கணத்தில் உம்பிரிவு தாங்காதையா! அருமை மகள் தமயந்திக்கு அருகணைய எண்ணித்தான் "தமே" பிறந்த நாள் பார்த்து உன்னுயிரையும் இணைத்தாயோ!

கிருபாகரன் தாளில் நும் ஆத்மா சாந்தி பெறுக!

ஏக்கம் நிறைந்த உள்ளங்கள்!

மனைவி, மகன் [இந்திரன்],
மகள்மார், மருமக்கள் (பாறின்,பிரான்ஸ்),
பேரர்கள்.

"சீவஸ்தன்"
கொக்குவில் மேற்கு. [21796]

# நினைவலைகள்

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான
நாதஸ்வர வித்துவான்

## ந. கைலாசக்கம்பர்

எமது தேவஸ்தானத்தில் இறைபணி ஆற்றி இறை சிந்தனையை வளர்த்து, கலைப்பாரம்பரியத்தை காத்த ஆத்மார்த்த கலைஞனுக்கு எமது அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

க. மங்களேஸ்வரக் குருக்கள் (ஆசாரியார்),
து. முருகேசு (தர்மகர்த்தா),
ஆ. அம்பலவி முருகன் (தர்மகர்த்தா)

ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர். [சி-2569]

# இரண்டாம் வருட நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 — 05 — 1962 | 07 — 07 — 1990 |

அமரர்

## இராஜா ஸ்ரீபிரபாகரன்

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென மறைந்த செல்வமே! உமது ஆத்மா சாந்தி பெற இறைவனை என்றும் வேண்டி நிற்கின்றோம்.

உமது பிரிவைத் தாங்காத
மனைவி, தாய், சகோதரன்,
உற்றார், உறவினர்கள்.

64/3, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். [21715]

# ஓராண்டு நினைவஞ்சலி



| வீரஜனனம்: | வீரமரணம்: |
|---|---|
| 05 — 09 — 1973 | 13 — 07 — 1991 |

## வீரவேங்கை சுரேஸ்
## சுப்பிரமணியம் மணிவண்ணன் [பாபு]

சொந்த நலனையெல்லாம் வென்றுதள்ளிவிட்டு
இந்தமண் காக்க எழுந்தபெரும்புயலே உன்னை
நினையாமல் ஊரை உலகை இனம் தன்னை
நினைத்த
தமிழ்மகனே சுரேஸ்! நீயிருந்த வீடும் நினைவிருக்கும்,
நெஞ்சகமும் வாயிருந்த இன்சொல் மழலைக்கனி
மொழியும்,இல்லையென்று நம்பஇதயம் மறுக்குதடா
நின் ஆன்மா நித்திய சாந்திபெற
நித்தமும் சுரேஸை வேண்டுகின்றேன்.

ஆனையிறவு நேரடி மோதலில் இவருடன் வீரமரணமடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலி.

உமதுபிரிவால் துயருறும்;
குடும்பத்தினர்.

10/3A, ஓட்டுமடம் றோட்,
யாழ்ப்பாணம். [5145]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### 6 வாரங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் கடந்த மூன்று வாரங்களில் மட்டும் 300 படையினர் பலியானதாக பி.பி.ஸி. கணக்கிட்டுள்ளது.

இந்தா பாருங்கள்! விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைந்து அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு இழுத்து வருகிறோம். அப்படிச் செய்வதன் மூலம் நாங்கள் நினைத்த தீர்வை அவர்கள் மீது திணித்து விடுகிறோம் என்ற தோரணையில் அரசியல்வாதிகள் சன்னதம் போட்டார்கள்!

விடுதலைப் புலிகளை அழித்து விடுகிறோம். அதன் பின்னர் அரசியல் தீர்வுகாண முடியும் என்று எக்காளம் போட்டுக்கொண்டு, கடந்த மே மாதம் 28 ஆம் திகதி வலிகாய் தாக்குதலுடன் தங்கள் 'பெரிய' நடவடிக்கைகளை படையினர் வடக்கில் ஆரம்பித்தனர்.

இதோ, விடுதலைப் புலிகள் வசம் உள்ள பகுதிகளை எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருகிறோம் என்று வெட்டி முழக்கினார்கள். புதிய தந்திரோபாயங்கள் என்றார்கள். வெல்லமுடியாத உத்திகள் என்றார்கள்.

ஒன்றரை மாதங்களில்-- ஆறு வாரங்களில் —கண்ட பெறுபேறுகள் என்ன? கடைசி மூன்று வாரங்களில் மட்டும் 300 படையினரை இழந்திருக்கிறார்கள்! ஆறு வாரங்களில்... கணக்குத் திரட்டினால்..! புலிகள் சுட்டு வீழ்த்திய சீனச் சகடை அவற்றை விடவும் மிகப் பெரிய பேரிழப்பு!

இத்தனை இழப்புகளுக்கும் மத்தியில் அவர்கள் கண்ட வெற்றி.? ஏற்கனவே இருந்த இடங்களில் இருந்து சிறிய தூரம் நகர்ந்திருக்கிறார்கள். ஆனால் அங்கெல்லாம் நிரந்தரமாக நிலைகொள்ள முடியுமா என்பதில் படையினர் தரப்பிலேயே சந்தேகம் உண்டு. விடுதலைப் புலிகள் அதற்கு இடம்கொடுக்கமாட்டார்கள் என்பது அனுபவம்.

ஆயுதப் படையினரின் புதிய தந்திரோபாயங்கள் வெல்ல முடியாத உத்திகள் எல்லாம் என்னாயிற்று? அவற்றை முறியடித்துப் படையினர் தரப்பில் இழப்பை அதிகரிக்க தம்மிடம் பலம் உண்டு என்பதை விடுதலைப் புலிகள் கடந்த ஆறு வாரங்களில் நிரூபித்துவிட்டார்கள்!

விடுதலைப் புலிகளின் ஊடறுத்துத் தாக்கும் முறைக்கும் கவச வாகன எதிர்ப்பு முறைக்கும் முன்னால் படையினரின் புதிய உத்திகளால் நின்று பிடிக்க முடியவில்லை.

இந்த ஆறு வாரகால இராணுவ நடவடிக்கைகளின் மூலம் படையினரால் விடுதலைப் புலிகளின் பலத்தை உடைக்க முடிந்ததா?

தமிழ்ப் பகுதிகளில் குண்டுகளை வீசியும், எறிகணைத் தாக்குதல்களை நடத்தியும் அப்பாவிப் பொதுமக்களைக் கொல்ல முடிந்ததே அன்றிப் புலிகளை எதுவும் செய்ய முடியவில்லை.

அவர்கள் புதிது புதிதான உத்திகளைக் கையாண்டு படையினரைத் திணற வைக்கிறார்கள். அவர்களின் மிகப் பிந்திய யுத்த தந்திரோபாயம் எதுவாக இருக்கும் என்று எக்கணமும் தலையில் கைவைத்த வண்ணமிருக்கின்றனர் படை அதிகாரிகள்.

இதனை எடை போட்டாவது, தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒத்துவராது என்பதை தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் மனதார உணர்வார்களா? தமிழர்களும் சிங்களவர்களும் சமபலத்துடன் நின்று பேசி பிரச்சினையைத் தீர்ப்பதே உகந்த வழி என்று ஒப்புக் கொள்வார்களா?

---

## செஞ்சிலுவைச் சங்கத்துக்கு இடைக்கால நிர்வாகம்

### இரண்டொரு தினங்களில் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் இரண்டொரு தினங்களில் நடத்தப் படவிருப்பதாக தெரியவருகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவிகள் தமக்குக் கிடைக்கவில்லை எனக் காரணம் காட்டி கிளையின் தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர் ஆகியோரும் ஐந்து நிர்வாக சபை உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ததை அடுத்து இடைக்கால நிர்வாக குழு ஒன்று அமைக்கப் படவுள்ளது.

நிர்வாகக் குழு இராஜினாமாச் செய்த தினத்திலிருந்து அடுத்த 45 நாட்களுக்குள் மீண்டும் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்படும் என்றும் அது பற்றி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ராணுவ முகாம் தகர்ப்பில் களபலியான வீரர்கள்

செட்டிகுளம் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் வீரர்கள் நேற்று முன்தினம் அதிகாலை தகர்த்து அழித்து வீரச் சாதனை புரிந்த சமயம் ஆறு வேங்கைகள் களப்பலியாகினர். விழுப்புண் அடைந்த மற்றொருவர் பின்னர் வீரமரணமடைந்தார்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ கப்டன் மணிமாறன் [நடராசா சிவாகரன் — தண்ணீரூற்று]

★ கப்டன் தெய்வம் [நடராஜா ராஜீ — புளியங்குளம்]

★ இரண்டாம் லெப்டினன்ட் ஜெயரூபன் [சின்னத்தம்பி வசந்தகுமார் — வட்டக்கச்சி]

★ இரண்டாம் லெப்டினன்ட் சுரேந்திரன் [கிருஷ்ணமூர்த்தி கலாகரன் — ஊர்காவற்றுறை]

★ இரண்டாம் லெப்டினன்ட் இளங்கோ [இராமசாமி ரஞ்சித நிரஞ்சன் — மன்னார்]

★ வீரவேங்கை பகீரதன் [ஆறுமுகம் நடராஜா — கல்மடு, கிளிநொச்சி]

இந்த மோதலின் போது விழுப்புண் அடைந்திருந்த வீரவேங்கை கானகன் அல்லது லக்கி [சுப்பிரமணியன் சிவகுமார் — வவுனிக்குளம்] என்பவரும் வீரமரணமடைந்து விட்டார். [ஒ-5]

## இந்தியாவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ராஜேந்தர்சிங் ஆகியோர் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

நான்காவது வேட்பாளரான ராம் ஜெத்மலானி போட்டியில் இருந்து ஏற்கனவே விலகிக்கொண்டு விட்டார் என்பது தெரிந்ததே.

இந்திய நாடாளுமன்றத்தின் எம். பிக்களும், ஒவ்வொரு மாநிலங்களிலும் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களும் (எம் எல். ஏக்களும்) புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலில் வாக்களிப்பர்.

இவர்கள் ஒவ்வொருவரும் அளிக்கும் வாக்குகளுக்கு தனித்தனி பெறுமதி வழங்கப் படுவது வழக்கம்.

எம். பிக்கள் மற்றும் எம். எல். ஏக்கள் அளிக்கவிருக்கும் வாக்குகளின் மொத்தப் பெறுமதி 10 லட்சத்து 89 ஆயிரத்து 723 வாக்குகள் ஆகும்.

இதில் எம். பிக்கள் அளிக்கும் வாக்குகளின் பெறுமதி 5 லட்சத்து 44 ஆயிரத்து 752 வாக்குகள் ஆகும்.

ஒரு எம். பியின் வாக்கு 702 வாக்குகள் என்று கணக்கிடப் பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் (லோக சபையில்) 543 எம். பிக்கள் உள்ளனர். ராஜ்ய சபையில் 233 எம். பிக்கள் உள்ளனர். மொத்தம் 776 எம். பிக்கள் இத்தேர்தலில் வாக்களிப்பார்கள்.

25 மாநிலங்களின் சட்டசபைகளின் அங்கம் வகிக்கும் 3 ஆயிரத்து 972 உறுப்பினர்களின் வாக்குகளுக்கும் தனித் தனிப் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது.

எம். எல். ஏக்களின் வாக்கின் பெறுமதி மாநிலத்துக்கு மாநிலம் வித்தியாசப்படும்.

சிக்கிம் மாநிலத்தின் சட்டசபை உறுப்பினர் ஒருவரின் வாக்கின் பெறுமதி ஏழு ஆகும். இதுவே ஆகக்குறைந்த பெறுமதியாகும்.

உத்தரப் பிரதேச மாநிலத்தின் சட்டசபை உறுப்பினர் ஒருவரின் வாக்கின் பெறுமதி 208 ஆகும். இதுவே ஆகக் கூடியதாகும்.

இந்த அடிப்படையில் 3 ஆயிரத்து 972 எம். எல். ஏக்களின் வாக்குகளின் பெறுமதி 5 லட்சத்து 44 ஆயிரத்து 971 ஆகும்.

மொத்த வாக்குகளின் பெறுமதியில் ஆகக் கூடிய அளவைப் பெறும் வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார். [உ-எ]

## இந்திய 'தடா' சட்டத்துக்கு அமெரிக்காவில் எதிர்ப்பு!

இந்தியாவில் "தடா" சட்டம் பயன்படுத்தப்படுவதற்கு அமெரிக்காவில் ஆளும் கட்சி எம். பிக்கள் மீண்டும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

"தடா" சட்டத்தை இந்தியா ரத்துச் செய்யாவிட்டால் அந்நாட்டுக்கு வழங்கும் அமெரிக்க உதவிகள் அனைத்தையும் நிறுத்த வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்றை அவர்கள் கடந்த மாதம் அமெரிக்க காங்கிரஸுக்குக் கொண்டு வந்தனர்.

ஆளும்கட்சியான குடியரசுக் கட்சியைச் சேர்ந்த எம். பிக்களின் சார்பில் டொன் பேர்ட்டன் என்பவரின் பெயரில் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தில் மேலும் 27 எம். பிக்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

ஏற்கனவே இதேபோன்ற பிரேரணை ஒன்று அமெரிக்க காங்கிரஸின் முன் கொண்டு வரப்பட்டபோது அது தோற்கடிக்கப்பட்டது என்பதும்—

அப்போது பிரேரணைக்கு ஆதரவாக 180 பேர் வாக்களித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ]

## ஸ்ரீலங்காப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாடு தவிர்ந்த ஏனைய இடங்களிலும், கிழக்கிலும் உள்ள இராணுவத் தளங்கள் புலிகளின் இலக்குகளாகும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அச்செய்தியில் சுட்டிக்காட்டப்படுகிறது. [உ]

## தந்திரிமலைப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் உள்ள முகாம்களில் இருந்தும் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. [ஒ-5]

## சிங்களக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டின் முற்பகுதியிலுமாக இரு பெரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட சிறிலங்கா படையினர் செட்டிகுளத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்தனர் என்பதும்—

பின்னர் அப்பகுதியில் முகாம்களை அமைத்து அவற்றைப் பலப்படுத்தி வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கவை. [ஒ-5]

## அடக்குமுறைக்கு எதிராக எழுதுகோல் மூலம் போராடியவர்

### கோவை மகேசனுக்கு அஞ்சலி

கோப்பாய், ஜூலை 13

தமிழர்களை அடக்கி ஆள்வதற்குக் கங்கணம் கட்டி நிற்கும் ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைக்கு எதிராகவும், இந்தியாவின் வல்லாதிக்கத்துக்கு எதிராகவும் எழுதுகோல் கொண்டு போராடியவர் அமரர் கோவை மகேசன்.

"சுதந்திரன்" மூலம் தாம் ஆற்றிய பணி தடைப்பட நேர்ந்ததும் "வீரவேங்கை" பத்திரிகையைத் தொடர்ந்து தமிழ் இனத்தின் உரிமைக் குரலாக ஒலித்தார்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. ஆ. தேவர்.

நேற்று முன்தினம் மாலை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற இனமான எழுத்தாளர் கோவை மகேசனின் நினைவஞ்சலிக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் மானத்தையும் வீரத்தையும் உலகம் எங்கும் பறைசாற்றும் இதழாக வீரவேங்கை விளங்கியது—

தமிழீழத்தை மீட்கும் வரை, விடுதலைப் புலிகளின் வலது கரமாக இருந்து கடைசி மூச்சுவரை தனது எழுத்துப் பணி தொடரும் என்ற உறுதியோடு அவர் "வீரவேங்கை"யை நடத்தினார் —

தமிழினத்தின், தமிழீழத்தின் தேசியத் தலைவர் பிரபாகரனே என்பதில் அவர் உறுதியாக இருந்தார் —

தனது 14 ஆவது வயதிலேயே தமிழ்ப்பற்றும், தமிழ் மண் பற்றும் மிக்கவராக விளங்கி கோப்பாய் தொகுதியில் போட்டியிட்ட திரு வன்னியசிங்கத்தின் மேடைகளில் கோவை மகேசன் பேசி வந்தார். சுதந்திரனில் எழுதுவினைஞராகச் சேர்ந்த அவர் ஆறு ஆண்டுகளில் அதன் ஆசிரியராக உயர்ந்தார் — என்று கூறினார்.

#### துணிச்சலுடன் எழுதியவர்

திரு யோகரத்தினம் போகி தமது பேச்சின் போது கூறியதாவது:-

கோவை மகேசன் தமிழீழக் கொள்கையில் உறுதியாக நின்றவர். இந்த உரிமைப் போராட்டத்தை ஒரு காலத்தில் ஆதரித்து உணர்ச்சிபூர்வமாக பேசியவர்களில் சிலர் பின்னர் போராட்டத்தை கைவிட்டுவிட்டார்கள்.

ஆனால் அமரர் கோவை மகேசன் அவர்கள் எமக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் எம் மண்ணிலே இந்தியப் படைகள் செய்த கொடுமைகளை எதுவித பயமும் இன்றி துணிச்சலுடன் கண்டித்தவர்.

இவருடன் சேர்ந்து அவரது மனைவியும் உதவியாக இருந்தார். இருவரும் சேர்ந்து பத்திரிகை விற்பதற்காக வெளியில் செல்வதுண்டு.

நாம் திம்புப் பேச்சுவார்த்தைக்கு சென்றதை அவர் வீரவேங்கையில் கண்டித்து எழுதினார்.

திம்புப் பேச்சுவார்த்தைக்கு ஈழப் போராளிகள் சென்றதை நினைத்து எனது மனம் நிம்மதியிழந்து தவிக்கின்றது. உலகிலே வாழுகின்ற ஆறு கோடி தமிழர்களும் தம்பி பிரபாகரன் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அவர் தமிழீழ இலட்சியத்தை கிஞ்சித்தும் விட்டுக்கொடுக்க மாட்டார் என்பது எனது நம்பிக்கையாகும். — என்று எழுதினார்.

இது அவருடைய தமிழீழ இலட்சியப் பற்றையும், எமது இயக்கம் போராட்டத்தைக் கைவிட்டால் என்ன நடக்கும் என்ற பயத்தையும் எடுத்துக் காட்டியது — என்று கூறினார்.

மாமனிதர் எஸ். ரி. அரசு, சா. அ. தர்மரத்தினம், க. சொக்கலிங்கம், பொன். பூலோகசிங்கம், ஐபா சச்சிதானந்தம் ஆகியோரும் அஞ்சலி உரைகள் ஆற்றினர்.

அமரர் கோவை மகேசனின் சகோதரர் அவரின் படத்துக்கு மாலை அணிவித்து குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். [அ-72]

## படையினர் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 13

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 8 மணிக்கு யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

கல்லுண்டாய் கரையோரப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்ததால் பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. [உ-15]

## நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 13

புற்றுநோய், வாதக்காய்ச்சல் சம்பந்தமான கருத்தரங்குகள் நாளை காலை 9 மணிக்கு யாழ் மருந்தக மண்டபத்தில் நடைபெறும்.

புற்றுநோய் சம்பந்தமான கருத்துரையை யாழ் சுகாதார வைத்திய அதிகாரி டக்டர் ஆர். தெய்வேந்திரமும் வாதக்காய்ச்சல் சம்பந்தமான கருத்துரையை கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். யோகநாயகமும் வழங்குவர். (உ-18)

★ ★ ★

யாழ். மாவட்டத்திலுள்ள கால்நடைத்தீவன உற்பத்தியாளர்களுக்கான கூட்டம் நாளை காலை 9.00 மணிக்கு தாவடியிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவன மையப் பணியகத்தில் நடைபெறும்.

## ஐ.தே.க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகத் தெரிவிக்கப்பட்டது.

திலக் அருணசிரி என்ற பெயரில் தயான் ஜயதிலக்க எழுதிய மேற்படி கட்டுரை "சிலுமின" (லேக் ஹவுஸ்) பத்திரிகையில் வெளியானதை அடுத்து—

அப்பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தொடரப்போவதாக ஜே ஆர். அறிவித்திருந்தார் என்பதும்—

அதனைத் தொடர்ந்து அப்பத்திரிகை மன்னிப்புக் கோரியது என்பதும் குறிப்பிடத்தக்கவை. [ஒ-10]

## வற்றாப்பளை சம்பவம்:

### பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி வழங்கக் கோரிக்கை

"வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவத்தில் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு விசேட உதவி கிடைக்க வழி செய்ய வேண்டும்."

இப்படியான கோரிக்கையை வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பரிபாலன சபை விடுத்துள்ளது.

பரிபாலன சபை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் சில வருமாறு:-

★ இந்த சம்பவம் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப் பட்ட விசாரணைக் குழுவினர் சம்பவம் நடைபெற்ற இடத்தை நேரில் பார்வையிட்டு, சம்பந்தப்பட்டவர்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் விசாரணை செய்ய வேண்டும்.

★ இந்த விடயத்தில் நீதியும், நியாயமும் கிடைக்க சகல உதவிகளையும் எல்லாச் சமய ஸ்தாபனங்களும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும், அரசியல் தலைவர்களும், வெளிநாட்டு, சர்வதேச ஸ்தாபனங்களும் வழங்க முன்வர வேண்டும்.

## பாப்பரசர்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

1982 ஆம் ஆண்டு புனித பாப்பரசரைக் கொல்லும் நோக்கத்துடன் துருக்கிய இளைஞர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் வயிற்றில் படுகாயமடைந்திருந்தார் என்பது தெரிந்ததே.

சுமார் பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட காயங்களுக்கும் இப்போது அவருக்கு ஏற்பட்ட கடும் வயிற்று நோவுக்கும் தொடர்பிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

நேற்றுக் காலை ரோம் சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் ஞாயிறு ஆராதனை நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டார்.

அதன் பின்னர் பிற்பகலில் அவர் ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. [உ-10]


### திருவுரு காணாதேங்கினோம்!

நிறைவாய் கடல்சூழ் நயினைத் தலத்துமெம்
சிந்தையுள்ளும்
உறைவாய் நீநாகபூஷணி அம்மையே !
உன்னருட்பெருந்
துறைவாய் நுழைந்துன் சோதித் திருவுருக்கா
ணாதேங்கினோம்!
பிறைவாய் சூடிபித்தன் பிராட்டியே எம்மைத்
தாங்கிக்கொளே!

— நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை
(நயினை நாகபூஷணி அம்மன் தேர் இன்றாகும்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது

★ வரலாறும் சமூகக் கல்வியும் ★

## ஆண்டு 10

## துரித மீட்டலுக்கான வினாவிடை

ஆக்கம்:- க. சந்திரசேகரம்

ஏக விநியோகஸ்தர்கள்:-

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வெளியீடு:- சோதி வெளியீட்டு வாரியம்

விலை ரூபா 33/- மட்டுமே

(சி/2577) வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாதேவி கனகலிங்கம்

சுப்பையா கனகலிங்கத்தின் அன்பு மனைவியும், திருமதி வள்ளிப்பிள்ளை சின்னத்தம்புவின் அன்பு மகளுமான திருமதி கமலாதேவி கனகலிங்கம் 12-07-92 அன்று காலமானார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று [13-07-92] திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு சுழிபுரத்தில் உள்ள அன்னாரது தமையனாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.
[21746]

தகவல்:
திருமதி
வள்ளிப்பிள்ளை சின்னத்தம்பு

## திருமதி வயிரமுத்து செல்லம்மா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரான திருமதி வயிரமுத்து செல்லம்மா 12-07-92 இல் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்துவின் அன்பு மனைவியும், சொக்கநாதன் [இளைப்பாறிய அதிபர், தோப்பு அரசினர் வித்தியாலயம்], வாமதேவன் (ஒலிப்பதிவாளர்), கொழும்பு துரைராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், பகவதி திருமதி வாமதேவன் சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சசிதரன், சுதாகரன் [நோர்வே], பிரியதர்சினி, இந்துமதி, தர்சன், தயாமதி, சுதர்சனா, உஷாந்தினி, துவாகரன், சஞ்சீவன் ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று [13-07-92] நடைபெற்று, பூதவுடல் பகல் 12 மணியளவில் வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்
[21748]

தகவல்:
வ. சொக்கநாதன்
[மகன்]

## திரு. நல்லதம்பி இராசையா

அளவெட்டி தெற்கு அரிசம்பற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லதம்பி கறுபத்தின் சிரேஷ்ட புத்திரன் திரு. நல்லதம்பி இராசையா அவர்கள் 12-7-92 ஞாயிற்றுக்கிழமை நண்டகல் இறைபதம் சேர்ந்து விட்டார்.

இவர் நாகம்மாவின் அன்புக்கணவரும், கோபாலராசா சிவசுப்பிரமணியம் [சுவிஸ்], நித்தியானந்தம் [சுவிஸ்], நவரட்ணராஜா [சிமெந்துக் கூட்டுத்தாபனம்], சரோஜினிதேவி, தருலேஸ்வரி [சுவிஸ்], பாஸ்கரன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியநாதன் [சுவிஸ்], கமலாதேவி, நிர்மலாதேவி, மாலினி ஆகியோரின் மாமனாரும், தீபா, தர்சன், டெசிகா, நிரோஜன், சசிகரன், அனுசஜ், சதீஸ்குமார், அஸ்வினா, தமா ஆகியோரின் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் 13-7-92 திங்கட்கிழமை 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக அளவெட்டி தெற்கு, கொடடுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

மகள்:
திருமதி சரோஜினிதேவி சத்தியநாதன்
அடுவம்பற்று,
அளவெட்டி தெற்கு.
(33469)

# உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் கோவிலின் இரதோற்சவம் இன்று திங்கள் காலை 8 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

உரும்பராய் வடக்கு ஒடயம் பதி கற்பக விநாயகர் கோவிலின் இரதோற்சவம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். (த-154-111)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 13

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம், கைதடி கைவிறசிட்டி வடக்கு கந்தசுவாமி ஆலயம், சரவெட்டி தச்சன்தோப்பு பிள்ளையார் ஆலயம், கொக்குவில் வேம்படி ஸ்ரீ முருகமூர்த்தி கோவில், கோப்பாய் வடக்கு வெள்ளைகுளைப் பிள்ளையார் கோவில் ஆகியவற்றிலும் இன்று திங்கட்கிழமை தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

(ஒ-30-73)

# இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ் பிரதேச சாரணர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், யாழ். பிரதேச சாரண ஆணையாளர் திரு. இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

சுழிபுரம், ஜூலை 13

அபிராமி அந்தாதி முப்பத்தினான்காவது பாடலுக்கான ஆய்வுரை நூல் வழக்கம்பரை அம்மன் கோயிலில் இன்று — தேர்த் திருவிழா வன்று — வெளியிடப்படும். இது வழக்கம்பரை பஜனைச் சபையின் இருபத்தையந்தாவது நூல் வெளியீடாகும். [உ-28]

# காட்டிக்கொடுத்த பற்றரிகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 13

வவுனியா நகர் முகாமில் சோதனையை முடித்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு ஒருவர் சென்றபோது ஒருவரது இடுப்பில் [மடியில்] இருந்து ''பென் டோர்ச் பற்றரி''கள் விழுந்து அவரைக் காட்டிக் கொடுத்தன

அதனை அடுத்துச் சம்பந்தப்பட்டவர் விழித்துத் தயங்கி நின்றார். உடனே அவரை படையினர் நுணுக்கமாகச் சோதனையிட்டனர். அப்பொழுது அவரது இடுப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மேலும் நான்கு ''பற்றரி''கள் அடுத்தடுத்து நிலத்தில் விழுந்தன.

சம்பந்தப்பட்டவரை படையினர் கைப்பற்றிச் சென்றனர். இச்சம்பவம் கடந்த நான்காம் திகதி நடைபெற்றது. (ஒ-131)

# இராணுவ விசாரணை அடுத்த வாரம்!

கொழும்பு, ஜூலை 13

கொக்கட்டிச்சோலை படுகொலை தொடர்பாக 12 இராணுவத்தினர் மீது அடுத்த வாரம் இராணுவ விசாரணை நடைபெறவிருக்கிறது.

இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'சண்டே ரைம்ஸ்' இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது. [த-எ]

# போரூட் மூலம் 4 குளங்கள் திருத்தப்படும்

அராலி, ஜூலை 13

வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 4 குளங்கள் போரூட் நிறுவனத்தினால் திருத்தப்பட்டு பராமரிக்கப்பட உள்ளன.

அராலிப் பெரியகுளம், சுழிபுரம் நாவி கட்டுக்குளம், சங்ரத்தைக்குளம், சங்கானை மண்டிலைக்குளம் ஆகியவையே இந்த நான்கு குளங்களும் ஆகும். [இ-12]

## கூடிய விலையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதுவரை காலமும் மண்ணெண்ணெயைப் பதுக்கிய வர்த்தகர்கள் தற்போது தேங்காய்எண்ணெய், சவர்க்காரம் போன்ற பொருள்களையும் பதுக்கியும் கூடியவிலையில் விற்றும் வருகின்றனர்.

இவர்கள் மக்கள் படும் துன்பங்களை [illegible] துயரங்களையோ [illegible]தவர்கள்; எமது மக்கள் மீது மேலும் துன்பச் சுமையைத் திணிப்பவர்கள். மனித நேயமற்ற இவர்களது செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்

இவ்வாறு மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்ட பல வர்த்தகர்கள் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இவ்வாறு நடவடிக்கை எடுத்த பின்னர் திரும்பவும் இத்தகைய செயல்களில் ஈடுபடுவார்களாயின் இவர்களது பொருள்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுவதுடன் நீண்ட காலத்திற்கு தடுத்தும் வைக்கப்படுவர். இவர்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தந்துதவும் பொதுமக்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் — என்று உள்ளது. [ஒ]

# இணைப்புக் குறித்து சூழிக்க முயலும் சு. க!

சுதந்திரக்கட்சியின் மத்திய குழு கடந்த வியாழக்கிழமை கூடியபோது வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து ஆராய்ந்தது. இணைப்புக்கு எதிராக வெளியில் காட்டிக்கொள்ளாத ஒரு போக்கைக் கடைப்பிடிப்பது என்பது போன்ற ஒரு முடிவு அங்கு எடுக்கப்பட்டதாகத் தகவல் வெளிவந்திருக்கிறது.

இதன்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழு எடுக்கும் முடிவுக்கு எதிராக தாம் எந்தத் தீர்மானத்தையும் எடுப்பதில்லை என்றும் கூட்டத்தில் முடிவாகியதாம்

சுதந்திரக் கட்சியின் இந்த முடிவானது தெளிவற்றதும், கபடம் நிறைந்ததுமாகும் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

வடக்கு-கிழக்கை இணைக்காது இரண்டு மாகாண சபைகளில் இருந்தும் தெரிவாவோரைக் கொண்ட ''ஏப்பெக்ஸ்'' சபை ஒன்றை நிறுவும் திட்டத்தைத் தெரிவுக்குழு தாரித்துள்ளதையும் —

அதற்கு உட்பட்டு நின்று, வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்துக் கருத்துத் தெரிவிக்காமல் ''சுழித்து'' விடுவதற்குச் சுதந்திரக்கட்சி முயல்வதையும் — அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். (ஒ-10)

## பல்கலை அனுமதி முறையை எதிர்த்து

# வழக்குத் தாக்கல் செய்வதற்காக தனியாரிடம் நிதி சேகரிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 13

''பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக அரசு எடுத்திருக்கும் நிலைப்பாட்டை எதிர்த்து பாதிக்கப்பட்ட மாணவர்களின் சார்பில் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள நடவடிக்கைக் குழு இதுவரை எங்கும் பணச்சேகரிப்பில் ஈடுபடவில்லை. அதனால் நடவடிக்கைக் குழுவினால் அனுமதிக்கப்படாத எவரிடமும் நிதி உதவி வழங்க வேண்டாம்.''

இவ்வாறு நடவடிக்கைக் குழு சார்பில் திரு. சு. டிவகலாலா விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப் பெரும் நிதி தேவைப்படும் என்பதில் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள், தனிநபர்கள் ஆகியோரின் உதவியை நடவடிக்கைக் குழு நாட்டியுள்ள போதிலும் எங்கும் பணச் சேகரிப்பில் ஈடுபடவில்லை. பண உதவி செய்ய விரும்புவோர் யாழ். வர்த்தக வங்கியில் கணக்கு இல 2199 இல் வைப்பிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து நேரடியாக எவரிடமும் நிதி சேகரிக்கவில்லை. —இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை

வலிகாமம் வடக்குப் பிரிவு

### அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தல் சம்பந்தமான கூட்டம்

மேற்படி 14 7 92 [செவ்வாய்க்கிழமை], அருணோதயக் கல்லூரி, அளவெட்டியில் நடைபெறும் கூட்டத்திற்கு இப்பிரிவிலுள்ள தொண்டர்களையும், அங்கத்தவர்களையும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களையும் சமூக சங்கங்களின் அங்கத்தவர்களையும் அழைக்கின்றோம்.

—நிர்வாகம்

[சி/2575]



**Thileepan Research Fellowship For Biotechnology - 1992**

Those Who Applied For the above Fellowship, Please be Present for an interview with all documents on 17th July, 1992 at 10-00 a m in the office of the Dean, Faculty of Medicine.

Registrar,
University of
Jaffna.

(C 2579)



## யாழ். றோட்டறக்ட் கழகம் உதயன் நிறுவனத்தின்

ஆதரவுடன் நடத்தும்

# ஹொக்கி சுற்றுப் போட்டி

## இறுதியாட்டம்

பிரதம விருந்தினர் : திரு. வி. தியாகராசா
(பணிப்பாளர், விளையாட்டுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்: திரு. ஈ. சரவணபவன்
(நிர்வாக இயக்குனர், உதயன் - சஞ்சீவி)
திரு. என். எஸ். தனபாலன்
(அதிபர், பரியோவான் கல்லூரி)

இடம் : பல்கலைக்கழக விளையாட்டுத் திடல்
காலம் : இன்று பிற்பகல் 3-30 மணி

பிற்பகல் 3-30 : காட்சி ஆட்டம் —
பல்கலைக்கழக மகளிர் அணி எதிர் பரியோவான் கல்லூரி அணி

பிற்பகல் 4-00 : 3ஆம் இடத்துக்கான ஆட்டம் —
ஷெப்ரா அணி எதிர் பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி

பிற்பகல் 4-30 : இறுதியாட்டம் —
பல்கலைக்கழக நீல அணி எதிர் கிறாஸ் கொப்பேர்ஸ் அணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— யாழ். றோட்டறக்ட் கழகம்

(சி/2576)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் ஆவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org